# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2014 ஒக்டோபர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

IV. மனுக்கள்

V. கேள்விகள்

**01.** **கௌரவ யூ.ஜோர்ஜ் பெரேரா உறுப்பினரினால் கௌரவ மின்சக்தி அத்துடன் எரிசக்தி சமூக நலன்புரி மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு, வீடமைப்பு மற்றும் நிர்மாணம், மாகாண வீதி, நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரிடம் 2014.09.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(□/vi (I)14/35)**

அ. சென்ற மாகாண சபை கலைக்கப்பட்ட பின்னரான காலத்தினுள் மாகாண சபையின் எவ்வளவு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன ?

ஆ. அம் மாகாண சபை வீதிகளை மாவட்ட அடிப்படையில், மற்றும் தேர்தல் தொகுதி அடிப்படையில் பெயர் குறிப்பிட முடியுமா ?

இ. அக்கால எல்லையினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளுக்கான எல்லா நிதியும் இவ் வேளையில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதா ?

ஈ. அந் நிதி எந்த அமைச்சின் நிதியத்தில் செலுத்தப்பட்டுள்ளது ?

உ. அக்கால எல்லையினுள் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு பூர்த்தி செய்யப்படாத வீதிகள் காணப்படுகின்றனவா ? அவ்வீதிகளின் பெயர்களை குறிப்பிட முடியுமா ?

ஊ. அம் மாகாண சபை வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் முற்பண நிதி செலுத்தப்பட்டுள்ளதா ? அவ் வீதிகளின் பெயர்களை குறிப்பிட இயலுமா ?

**02.** **கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(□/vi (1)14/39)**

அ. சிறீ ஜயவர்தனபுர கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க தெரியாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பாக அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்வி :**
**(□/vi (1)14/40)**

அ. ஹோமாகம கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க தெரியாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்வி :**
**(/vi (1)14/41)**

அ. பிலியந்தலை கல்வி வலயத்திற்குரிய மாகாண சபை பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அப் பாடசாலைகளின் 2, 3, 4 அத்துடன் 5 ஆம் தரங்களில் எழுத்துக்களை எழுத அத்துடன் வாசிக்க இயலாத பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

இ. பாடசாலை அத்துடன் தரங்களுக்கு இணங்க எழுதுவதற்கு அத்துடன் வாசிப்பதற்கு இயலாத எண்ணிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ எஸ்.எம். மரிக்கார் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு ,காணி ,கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் ,மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்வி :**
**(/vi (1)14/42)**

அ. தெஹிவளை, கல்கிஸ்சை மாநகர சபையின் அதிகார பிரதேசத்திற்கு உரிய கல்கிஸ்சை பொது மயானத்தினுள் பழுதுபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இப் பழுதுபார்ப்பு நடவடிக்கை எந்த அரச அல்லது அரச சார்பற்ற தாபனங்களின் கீழ் இடம்பெறுகின்றது என்பதனை குறிப்பிடுகின்றீர்களா ?

இ. i. அந்த நிர்மாண நடவடிக்கைக்காக விலை மனுவினைக் கோருவது மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?
ii. அந்த நிர்மாண நடவடிக்கை மேற்பார்வை செய்யப்படுகின்றதா ? அப்படியாயின் அது எந்த தாபனத்தினால் ?

ஈ. இப் பழுதுபார்ப்பு நடவடிக்கையின் ஊடாக காலி வீதிக்கு சமாந்திரமாக பொது மயானத்தினுள் காணப்பட்ட பெறுமதி மிக்க தேக்க மரங்கள் பலவற்றை வெட்டி அகற்ற சட்ட ரீதியாக அங்கீகாரம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததா ?

உ. அப்படியாயின் அவ் அங்கீகாரத்தை வழங்கிய அரச அல்லது மாகாண தாபனத்தை குறிப்பிட முடியுமா ?

ஊ. அவ்வாறு வெட்டி அகற்றப்பட்ட பெறுமதி மிக்க தேக்க மரக் குற்றிகள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

எ. அம் மரக் குற்றிகள் விற்கப்பட்டிருந்தால் அதற்காகக் கிடைக்கப்பெற்ற நிதி சம்மந்தமாக எடுக்கப்பட்ட செயற்பாட்டினை தெளிவுபடுத்துவீர்களா ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. பொது நடவடிக்கை

**01. கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி , கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

***மேல் மாகாணத்தின் மாநகர சபையின் நகர முதல்வர் பிரதி நகர முதல்வர் மற்றும் சபை அங்கத்தவர்களுக்கும் பிரயாணப் படியினைச் செலுத்தும் கட்டளை***
**(மேல் மாகாண மாகாண சபை)**

"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 வது அதிகாரமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289

ஆம் பிரிவினூடாக அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் மற்றும்

ஒழுங்கு காணி, கல்வி உள்ளூராட்சி அத்துடன் மாகாண நிர்வாகம் மின்சக்தி அத்துடன் எரிசக்தி மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1846/19** ஆம் இலக்க மற்றும் 2014.01.21 ஆந் திகதி அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ***"மேல் மாகாணத்தின் மாநகர சபையின் நகர முதல்வர், பிரதி நகர முதல்வர் மற்றும் சபை அங்கத்தவர்களுக்கான பிரயாணச் செலவுகளை செலுத்துவதற்குரிய கட்டளை"*** மேலே கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 வது அதிகாரமாகிய மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவினூடாக மேலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு முன்வைப்பதுடன் அக் கட்டளையை அங்கீகரிக்க வேண்டும்.

**02. கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி , கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , மனிதவலு அத்துடன் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

***மேல் மாகாணத்தின் நகர சபைத் தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து பிரயாணச் செலவுப் படியைக் கொடுப்பனவு செய்வதற்குரிய விதி***

**(மேல் மாகாண மாகாண சபை)**

"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 255 வது அதிகாரமாகிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 193(1) (எ,ஏ) ஆகிய உட்பிரிவினூடாக அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு காணி, கல்வி உள்ளூராட்சி அத்துடன் மாகாண நிர்வாகம் மின்சக்தி அத்துடன் எரிசக்தி மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1846/19** ஆம் இலக்க மற்றும் 2014.01.21 ஆந் திகதி அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ***"மேல் மாகாணத்தின் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர் அத்துடன் சபை அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து பிரயாணச் செலவுப் படியைக் கொடுப்பதற்கு உரிய விதிகள்"*** மேலே கூறப்பட்ட "1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 255 வது அதிகாரமாகிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 194 ஆம் பிரிவினூடாக மேலும் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு முன்வைப்பதுடன் அவ் விதிகளை அங்கீகரிக்க வேண்டும்.

**03. கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் அத்துடன் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு ,காணி , கல்வி, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , மனிதவலு ,மற்றும் தொழில் வாய்ப்பு , பொறியியல் சேவை அத்துடன் தகவல் அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

***மேல் மாகாணத்தின் பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து பிரயாணச் செலவுப் படியைக் கொடுப்பனவு செய்வதற்குரிய விதி***

**(மேல் மாகாண மாகாண சபை)**

"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் **184(1)** உப பிரிவின் கீழ் அப்போதைய மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு காணி, கல்வி உள்ளூராட்சி அத்துடன் மாகாண நிர்வாகம் மின்சக்தி அத்துடன் எரிசக்தி மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1846/19** ஆம் இலக்க மற்றும் 2014.01.21 ஆந் திகதி அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ***"மேல் மாகாணத்தின் பிரதேச சபையின் தலைவர், உப தலைவர் அத்துடன் சபை அங்கத்தவர்களுக்கு போக்குவரத்து பிரயாணச் செலவுப் படியைக் கொடுப்பதற்கு உரிய விதிகள்"*** மேலே கூறப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184(2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு முன்வைப்பதுடன் அவ் விதிகளை அங்கீகரிக்க வேண்டும்.

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ ஹர்ஷன ராஜகருணா - எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளர்**

இலங்கை தென் ஆசியாவின் போதைப் பொருளைப் பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையம் ஒன்றாக மாறி உள்ளது என பொலிஸ் அறிக்கைகளில் வெளியாகின்றன என ஊடகங்களின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. உலகத்தின் சீரான செயற்பாட்டிற்கு பாரதூரமான அச்சுறுத்தலான போதைப் பொருள் நாட்டின் மூலைமுடுக்கு உள்ளடங்கலாக எல்லா இடங்களிலும் காணப்படுவதுடன் பாடசாலைப் பிள்ளைகள் உள்ளிட்ட இளைஞர்களும் நாளுக்கு நாள் இதற்கு அடிமையாகிக் கொண்டு இருக்கின்றனர். மேல் மாகாணத்தின் பிள்ளைகளும் இளைஞர்களுமே இங்கு பாரிய பாதிப்பிற்கு உட்பட்டுள்ளனர்.

தென் ஆசியாவிலே பாரிய அளவு போதைப் பொருள் இலங்கையில் கைது செய்யப்பட்ட போதும் அது தொடர்பாக ஒழுங்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமையும், அதேபோல் சுங்கத்தினுள் கொள்களன்களை ஒழுங்கான முறையில் பரிசோதனைக்கு உட்படுத்தாது விடுவிப்பதினாலும், போதைப் பொருள் வியாபாரத்திற்கு பாரிய அளவு ஒத்துழைப்பு ஒன்று கிடைக்கக் கூடியதாக உள்ளது.

இவ் எல்லா நிலைமைக்கும் அரசு பொறுப்புச் சொல்ல வேண்டியதுடன் உதாசீனமாக இருக்கும் இந் நிலமையில் இருந்து விலகி நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரமான நிலைமை ஒன்றாக அதிகரித்துள்ள போதைப் பொருளினை இந் நாட்டில் இருந்து இல்லாதொழிப்பதற்கான ஒழுங்கான மற்றும் விரைவான வேலைத் திட்டம் ஒன்றினை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

**(பி/vi (1)14/05)**

**02. கௌரவ சுனில் வடகல அவர்கள்**

"ஒன் லையின் அதிஷ்ட இலாபமீட்டு வியாபாரம் 2014 ஏப்ரல் மாதம் முதலாவது வாரம் தொடக்கம் நடைமுறைக்கு வருவதுடன் அதன் தலைமையகம் கொழும்பு 02 நவம் மாவத்தை யில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது மேலும் நாடு பூராகவும் அவ்வாறான நிலையங்கள் 3000 த்தினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இது அதிஷ்ட இலாபம் என்ற போர்வையிலான சூது ஒன்றாகுவதுடன் எங்கள் நாட்டின் இளைஞர்கள் வேகமாக அதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் இதனூடாக லொட்டோ மற்றும் ஜெக்பொட் ஆகிய விளையாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதும் வீட்டில் இருந்தும் கூட இவ் அதிஷ்ட இலாபச் சீட்டில் பங்குபற்றக் கூடியதாக இருப்பதும் இதில் காணப்படும் பயங்கரமான விடயமாகும். இந்த அழிவில் இருந்து மேல் மாகாண மக்களை மீட்டெடுப்பது மாகாண சபையின் முக்கிய கடமையும் பொறுப்பும் ஆகிய படியால் இவ்வாறான வியாபாரங்களுக்கு உதவி ஒத்தாசைகளை எல்லா பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களும் மற்றும் தாபனங்களும் வழங்காமல் இருக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது."

**(பி/vi (1)14/06)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2014.09.24 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.